### தீரசன் சின்னமலை பிறந்தநாள்: சுதந்திரப் போராட்டத்தை

# கொங்கு மண்டலத்தில் எடுத்து நடத்தியதில் பெரும் பங்கு பெற்றவர்!

## சட்டப்பேரவையில் அமைச்சர் எ.வ.வேலு பெருமிதம்!

சென்னை, ஏப்.18-

சட்டப்பேரவையில் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் கேள்வி நேரத்தின் போது இன்று தீரன் சின்னமலை அவர்களுக்கு பிறந்தநாள். சுதந்திரப் போராட்டத்தை கொங்கு மண்டலத்தில் எடுத்து நடத்தியதில் அவருக்கு பெரும் பங்குண்டு என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

இது பற்றி பேரவையில் நடந்த விவாதம் வருமாறு:-

**டி.கே. அமுல் கந்தசாமி:** வால்பாறை தொகுதி, ஆனைமலைப் பகுதியில் ஆய்வு மாளிகை கட்ட அரசு முன்வருமா?

**அமைச்சர் எ.வ. வேலு:** தங்கள் அனுமதியோடு ஒரு நல்ல செய்தியை நான் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். சுதந்திரப் போராட்டத்திற்கு வித்திட்டவர் களில் கொங்கு நாட்டில் முக்கியமானவர் தீரன் சின்னமலை அவர்கள். இன்று அவருடைய பிறந்த நாளாகும். அவர், திருப்பூர் மாவட்டம், காங்கேயம் பக்கத்திலுள்ள மேலப்பாளையம் என்று ஊரில் பிறந்தவர். அவருடைய இயற்பெயர் தீர்த்தகிரி சர்க்கரை மன்றாடி



யார் என்பதாகும். இவர் இளம் வயதிலேயே வாள் வீச்சு, வில் வித்தை, சிலம்பாட்டம் போன்ற போர்க் கலைகளில் திறம்பட கற்றுத் தேர்ந்தவர். மைசூர் அரசர்கள் கொங்கு நாட்டில் வரி வசூல் செய்ய வேண்டும் என்றபோது, முதன்முதலாக அதைத் தடுத்து நிறுத்திய ஒரு மாபெரும் வீரர் அவர். பிறகு, திப்பு சுல்தானோடு இணைந்து ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியை எதிர்த்த போராட்டத்தில் முதன்மையாக இருந்தவர். ஸ்ரீரங்கப்பட்டணத்தில் நடந்த போராட்டத்தில் ஆங்கிலேயரை தோற்கடித்து, ஓடாநிலைக்குத் திரும்பி வந்தார்கள்.

கட்டபொம்மன் மற்றும் திப்பு சுல்தான் மறைவுக்குப் பின்னால், இந்தச் சுதந்திரப் போராட்டத்தை கொங்கு மண்டலத்தில் எடுத்து நடத்தியதில் அவருக்கு பெரும் பங்குண்டு. அப்படிப்பட்டவர், ஓடாநிலை. அறச்சலூர் ஆகிய இடங்களில் கொரில்லாப் போர் என்கிற தந்திரத்தை முதன்முதலாகக் கற்றுத் தந்தவரே நம்முடைய தீரன் சின்னமலை அவர்கள்தான். நேரடி போரில் வெற்றி பெற முடியாத ஆங்கிலேயர்கள், சூழ்ச்சியாக அவரை கைது செய்து, அவரால் உருவாக்கப்பட்ட சங்ககிரி கோட்டையில் அடைத்து வைத்தார்கள்.

அவரது நினைவை போற்றுகின்ற வகையில் இன்றைக்கு தமிழ்நாட்டில் திருச்சிராப்பள்ளி, ஈரோடு மற்றும் ஓடாநிலை ஆகிய இடங்களில் சிலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. சென்னையைப் பொறுத்தளவிற்கு, 4.10.1998 அன்று கிண்டியில் அவருக்காக சிலை அமைத்தவர் தமிழ்நாட்டை ஆண்ட முதலமைச்சராக இருந்த அருமை அண்ணன் கலைஞர் அவர்கள்தான். ஒன்றிய அரசில் பங்கு பெற்ற போது, அப்போது அவருக்கு தபால் தலை வெளியிட வேண்டுமென்று சொன்னவரும் அண்ணன் கலைஞர் அவர்கள்தான். எனவே, அப்படிப்பட்ட சுதந்திரப் போராட்ட வீரராக இருந்து, சுதந்திரத்திற்காக வித்திட்டவருக்கு இன்றைக்கு பிறந்த நாள் என்கிற காரணத்தினால், சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களின் சார்பாக அவருக்கு வீர வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உறுப்பினர் டி.கே. அமுல் கந்தசாமி அவர்கள் கேள்வி கேட்டிருக்கிறார்கள். வால்பாறை தொகுதி, ஆனைமலையில் 3 அறைகள் கொண்ட ஆய்வு மாளிகை நெடுஞ்சாலைத் துறையின் சார்பில் பராமரிக்கப்பட்டு, நல்ல நிலையில் இப்போது இருக்கிறது. மேலும், இந்தாண்டு பொள்ளாச்சி - வால்பாறை சாலையில் அட்டகட்டி மலைப் பகுதியில் 2 அறைகள் கொண்ட ஆய்வு மாளிகை ஏற்கெனவே இருக்கிறது. இப்போது ஆய்வு மாளிகை கட்டுவதற்கு முதலமைச்சர் அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று பரிசீலிக்கவுள்ளோம்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

### பல்கலைக் கழகங்களின் உரிமையை மீட்டுத்தந்த

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு கல்வியாளர்கள் சார்பில் பாராட்டு!

## பல்கலைக் கழக பதிவாளர்கள் பணியிடை விழா பயிற்சியை தொடங்கி வைத்து - அமைச்சர் கோவி.செழியன் அறிவிப்பு!

சென்னை, ஏப். 18-

“பல்கலைக் கழகங்களின் உரிமையை மீட்டுத் தந்த முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு கல்வியாளர்கள் சார்பில் பாராட்டு விழா நடைபெறுகிறது” என்று உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி. செழியன் கூறியுள்ளார்.

நேற்று (17-04-2025) சென்னை தனியார் ஹோட்டலில் பல்கலைக் கழகப் பதிவாளர்கள், தேர்வுக்கட்டுப்பாடு அலுவலர்கள் மற்றும் துணை பதிவாளர்களுக்கான பணியிடை பயிற்சியினை தொடங்கி வைத்து, உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன் பேசியதாவது.

“எல்லோருக்கும் எல்லாம்” என்கிற சமூகநீதியின் சாரத்தைப் ஆரம்பக் கல்வி முதல் ஆராய்ச்சிக் கல்வி வரை அனைவருக்கும் நம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பரவலாக்கியுள்ளார். எல்லோருக்கும் எல்லாம்; சம வாய்ப்பு; சமநீதி, சமூகநீதி என்பதை உயர்கல்வியில் நிலைநாட்டியிருக்கின்றோம் என்றால் அது நம்முடைய முதலமைச்சர் அவர்களின் ஆட்சியில் தான்.

தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் உலகளாவிய தர வரிசையில் இடம்பெறுவதை நோக்கமாகக் கொண்டு முன்னெடுப்புகள் மேற்கொள்ள வேண்டும். தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம் நமது மாநிலத்தில் உள்ள அரசு பல்கலைக்கழகங்களின் பதிவாளர்கள், தேர்வுக் கட்டுப்பாடு அலுவலர்கள் மற்றும் துணை பதிவாளர்களுக்கு நிர்வாகத் திறன் மற்றும் செயல்திறன் சார்ந்த அணுகுமுறைகளை மேம்படுத்தும் நோக்கத்துடன் பயிற்சி வழங்குகிறது.

நமது பல்கலைக்கழகங்கள் பொதுமக்களிடம் நம்பிக்கை மற்றும் நன்மதிப்பை பெற வேண்டும் என்பதற்கான அடிப்படை, திறமையான நிர்வாகத்தை உறுதி செய்வதின் மூலமே நடக்கும். இத்தகைய பயிற்சிகள் பல்கலைக்கழக நிர்வாகத்தை



யும், நிதி மேலாண்மையையும் மேலும் வலுப்படுத்தும்.

**கற்பித்தல் முறை குறித்து பயிற்சி!**

ஒரு நிறுவனத்தின் பணி சிறப்பாக அமைய வேண்டுமானால் நிறுவனத்தில் பணிபுரியும் அலுவலர்கள் திறமை மிக்கவர்களாகவும், தனது பணியின் தன்மையை முழுவதும் அறிந்து செயல்படுத்துபவர்களாகவும் இருக்க வேண்டும். அதற்கு பணியாளர்களுக்கு வழக்கமாக பயிற்சி அளிப்பது அவசியம். இதன் அடிப்படையில் மாநில உயர்கல்வி மன்றம் ஏறக்குறைய 1,000 கல்லூரி பேராசிரியர்களுக்கு கற்பித்தல் முறை குறித்து ஏற்கனவே பயிற்சி வழங்கியுள்ளது.

தமிழ்நாட்டின் உயர்கல்விச் சூழலை மேம்படுத்துவதில், அரசு பல்கலைக்கழகங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன. மாநில அரசுப் பல்கலைக்கழகங்களின் கல்வி மற்றும் நிர்வாகப் பணிகளின் முதன்மை பொறுப்பாளர்களாக திகழும் பதிவாளர்களுக்கும், தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர்களுக்கும் இப்பயிற்சி வழங்கப்படுகிறது. இப்பயிற்சியில் தற்போது 65 உயர் அலுவலர்கள் பங்கேற்று உள்ளனர்.

சர்வதேச கருத்தரங்குகள் மற்றும் மாநாடுகள் அதிகளவில் அரசு பல்கலைக்கழகங்களில் நடைபெற ஊக்குவிக்க வேண்டும். தமிழ்நாட்டிலிருந்து புலம்பெயர்ந்த கல்வியாளர்கள், விஞ்ஞானிகள் அவர்களின் பங்களிப்பு மற்றும் ஆலோசனைகளைப் பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். சர்வதேச பல்கலைக்கழங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொண்டு நமது மாணவச் செல்வங்கள் உலகளவில் உயர்ந்து நிற்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**ஆராய்ச்சிகளை ஊக்குவிக்க வேண்டும்!**

மேலும், ஆராய்ச்சிகளை ஊக்குவிக்க வேண்டும். பல்கலைக்கழக அளவில் ஒரு நிபுணர் குழுவை (பல்கலைக்கழகம், உயர் கல்வி, மனிவள மேம்பாடு மற்றும் நிதி துறைகள்) அமைத்து மிக நீண்ட காலமாக நிலுவையில் உள்ள தணிக்கைத் தடைப் பத்திகளை பரிசீலித்து தீர்வு காண வேண்டும். பல்கலைக்கழங்களால் நடத்தப்படும் பருவத்தேர்வுகள் நடத்தவும், தேர்வு முடிவுகள் ஒரு குறிப்பிட்ட கால அளவில் வெளியிடுவதையும் உறுதிப்படுத்திட வேண்டும். முதுநிலை படிப்பில் சேருவதற்கு ஒரு மாதிரி கால அளவினை உறுதி செய்திட வேண்டும்.

தமிழகத்தில் உள்ள பல்வேறு பல்கலைக்கழங்கங்களின் உயர் அலுவலர்களை ஒரே மேடையில் இணைக்கும் அரிய வாய்ப்பாக இந்த பயிற்சி விளங்குகிறது. இந்த பயிற்சி வழங்குவதன் மூலம் நிர்வாகத்தில் உள்ள சவால்களுக்கு ஒருங்கிணைந்த தீர்வுகளை வகுப்பதோடு, எதிர்கால வளர்ச்சிக்கான திட்டமிடலுக்கான தெளிவான பார்வையை உருவாக்கும் மையமாகவும், பொறுப்புணர்வும் திறனும் நிரம்பிய நிர்வாகத்தை ஊக்குவிக்கும் ஒரு முக்கிய மான தளமாகவும் செயல்படும் என்பதில் ஐயமில்லை.

உயர்கல்வியில் உச்சம் தொட பல்கலைக்கழக நிர்வாகத்தில் போதுமான முன்னெடுப்புகளை செய்ய இந்த பயிற்சியினை முழுமையாக பெற்று பயனடைய அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் கோவி. செழியன் பேசினார்.

மேலும், வரும் மே 3-ஆம் தேதி சென்னை நேரு உள் விளையாட்டு அரங்கத்தில் சட்டப் போராட்டத்தை நடத்தி பல்கலைக் கழக உரிமையை மீட்டுத் தந்த நமது முதலமைச்சர் அவர்களுக்கு கல்லூரி முதல்வர்கள், சுயநிதி கல்லூரிகளின் கூட்டமைப்பினர், மாணவர்கள் மற்றும் ஒட்டுமொத்த கல்வியாளர்கள் சார்பாக மாபெரும் பாராட்டுவிழா நடத்திட விருப்பத்தினை தெரிவித்துள்ளார்கள்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்ற துணைத் தலைவர் எம்.பி. விஜயகுமார், (ஓய்வு) மற்றும் பல்கலைக் கழகப் பதிவாளர்கள், தேர்வுக்கட்டுப்பாடு அலுவலர்கள் மற்றும் துணை பதிவாளர்கள் கலந்து கொண்டனர்.

### திராவிட இனமான உணர்வு – மொழிப்பற்று எழுச்சியூட்டிய

# புரட்சிக் கவிஞர் பாரதிதாசனுக்கு ரூ.3 கோடியில் மணிமண்டபம் - திருவுருவச் சிலை!

## முதல்வருக்கு – பாரதிதாசன் பேரன் சேரன் நன்றி!

சென்னை, ஏப். 18-

தமிழ்நாட்டில் தன் பாட்டுத்திறத்தால் எழுச்சி ஊட்டி, தன் புரட்சி பா வன்மையால் திராவிட இனமான உணர்வும், மொழிப்பற்றும் ஊட்டிய புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களுக்கு விழுப்புரம் மாவட்டம் கோட்டிகுபபத்தில் மூன்று கோடி செலவில் மணிமண்டபமும், திருவுருவச் சிலையும் அமைக்கப்படும் என்று அறிவித்துள்ள திராவிட மாடல் முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து புரட்சிக் கவிஞர் அவர்களின் மகள் வழிப் பேரன் சேரன் நன்றி தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

வீழ்ச்சியுறு தமிழ்நாட்டில் எழுச்சி ஊட்டி தன் புரட்சி பா வன்மையால் திராவிட இனமான உணர்வை ஊட்டி தமிழ் மொழிப் பற்றை மக்களிடையே கொண்டு சென்ற புரட்சி கவிஞர் பாரதிதாசன் அவர்களுக்கு

விழுப்புரம் மாவட்டம் கோட்டக் குப்பம் நகராட்சியில் மூன்று கோடி செலவில் மணிமண்டபமும் முழு திருஉருவச் சிலையும் அமைக்கப்படும் என்ற தமிழ்நாடு அரசின் அறிவிப்பு பாவேந்தர் பேரனாகிய எனக்கும் என் குடும்



பத்தினருக்கும் பேருவகையை அளித்தது. தமிழ்நாடு முதலமைச்சர் திராவிட இயக்கத்தின் பேராற்றல், பெருமை கொள் பெருந்தலைவர். அய்யா முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கு என் சார்பாகவும் என் குடும்பத்தின் சார்பாகவும் நன்றியையும் வணக்கத்தையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதற்கு துணை நின்ற தமிழ் கவிஞர்கள், இனமான உணர்வாளர்கள், தமிழ் அறிஞர்கள், தமிழ் மன்றங்கள், தமிழ் இலக்கிய ஆர்வலர்கள், குறிப்பாக சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா ஆகியோருக்கு என்னுடைய வணக்கத்தையும் நன்றியையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### தென்காசி வடக்கு மாவட்டம் - கழக தீர்மானக்குழு உறுப்பினர்

# ப.ஆ.சரவணன் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஏப். 18 -

தென்காசி மாவட்டக் கழக முன்னோடி - தலைமைக் கழக தீர்மானக் குழு உறுப்பினர் ப.ஆ.சரவணன் அவர்கள் நேற்று (17.4.2025) மதியம் 12 மணி அளவில் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். தகவல் அறிந்த கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று மறைவெய்திய ப.ஆ.சவரணனின் குடும்பத்தாருக்கு தனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொண்டுள்ளார்.




தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

**ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்**

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் அமைப்புகளுக்கு, இளைஞர் அணி அமைப்பாளர்–துணை அமைப்பாளர்களை, மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாவட்ட வாரியாக நியமித்து வருகிறார்.

சேலம் மத்திய மற்றும் விருதுநகர் தெற்கு ஆகிய மாவட்டங்களில் நியமிக்கப்பட்ட இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், அந்தந்த மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 19.04.2025 சனிக்கிழமை | காலை 9.00 மணி | சேலம் மத்திய | வீரபாண்டியார் அரங்கம், கலைஞர் மாளிகை, சேலம். |
| 19.04.2025 சனிக்கிழமை | காலை 9.00 மணி | விருதுநகர் தெற்கு | கந்தசாமி ராஜம்மாள் திருமண மண்டபம், விருதுநகர் |

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 16-04-2025







தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

**சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி**

**இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு**

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம் 1–இல், ஒரு சட்டமன்றத் தொகுதிக்கும் மண்டலம் 9–இல், மூன்று சட்டமன்றத் தொகுதிகளுக்கும் சமூக வலைத்தளப் பயிற்சி, கீழ்க்காணும் நாட்களில் நடைபெற இருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | மண்டலம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|---|
| 19.04.2025 சனிக்கிழமை | மாலை 4.00 மணி | 1 | அண்ணா நகர் | அண்ணா நகர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம், பூந்தமல்லி நெடுஞ்சாலை, அமைந்தக்கரை |
| 19.04.2025 சனிக்கிழமை | காலை 10.00 மணி | 9 | தூத்துக்குடி | கலைஞர் அரங்கம், தூத்துக்குடி |
| 19.04.2025 சனிக்கிழமை | மாலை 4.00 மணி | | கோவில்பட்டி | சௌபாக்கியா மஹால், கோவில்பட்டி |
| 26.04.2025 சனிக்கிழமை | காலை 10.00 மணி | | விளாத்திகுளம் | ஜி.வி.மஹால் விளாத்திகுளம் |

அந்தந்த சட்டமன்றத் தொகுதி பாகங்களில், இப்பயிற்சிக்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ள இளைஞர்கள் தவறாமல் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 16-04-2025

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி